கோவை கங்கா மருத்துவமனையில்

# ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை



**கோவை, ஜூன்.25**

கோவை கங்கா மருத்துவமனையில் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்படவுள்ளது.

கோவை கங்கா மருத்துவமனை இயக்குனர்களான டாக்டர்கள் ராஜசபாபதி, ராஜசேகரன் ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது. இந்தியாவிலேயே முதன் முறையாக ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவையை கங்கா மருத்துவமனை தொடங்குகிறது.

இந்த ஹெலிகாப்டர் இரட்டை என்ஜினுடன் வெஸ்ட் லாண்ட் ஹெலிகாப்டர் நிறுவனத்தால் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டது. இதில் நோயாளிகளை ஸ்டிரெச்சரில் கொண்டு செல்லும் வசதி, சுவாசிப்பதற்கு தேவையான ஆக்சிஜன் மற்றும் நவீன கருவிகள் இடம் பெற்றுள்ளன.

220 கிலோ மீட்டர் தூரத்திற்கு போய் வரும் அளவிற்கு தேவையான பெட்ரோல் ஹெலிகாப்டரில் இருக்கும். கோவை வட்டமலைப்பாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரியில் இதற்காக நவீன ஹெலிபேட் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய 5 மாநிலங்களிலும் பெரும்பாலான பகுதிகளுக்கு சென்று வர முடியும். கோவையில் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவையை தொடங்குவதில் பெருமைப்படுகிறோம். இந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவையை இந்திய விமான படை தளபதி தானோ தொடங்கி வைக்கிறார்.

கோவை மாவட்ட கலெக்டர் ஹரிஹரன், மேற்கு மண்டல ஐ.ஜி.பாரி, போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள். இந்த சேவையை மற்ற தனியார் மருத்துவமனைகளும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கப்படும் என்றார். பேட்டியின் போது மருத்துவமனை தலைவர் சண்முகநாதன் உடனிருந்தார்.